| | | |
|---|---|---|
| சாட்சி : DW 1<br>திரு.சேகர்<br>த/பெ.மருதை | அ.வ.எண். 145/2009 | 19.06.2026 |

1ம் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) நான் வழக்கு சொத்தை கிரையத்திற்கு வாங்கவில்லை என்றால் சரியல்ல, கிரையம் வாங்கியது தான். எவ்வளவு தொகைக்கு கிரையம் பெற்றேன் என்றால் 5 குடும்பத்தின் சார்பில் கிரையம் வாங்கப்பட்டுள்ளது, அதனால் கிரைய தொகை எனக்கு சரியாக தெரியவில்லை. வழக்கு சொத்தை கிரையம் பெறும்பொழுது அளந்து கிரையம் பெற்றார்களா என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, அளந்து தான் வாங்கினார்கள்.

2) மேற்படி அளவீடு செய்த விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியும். நான் சொல்வது போல் அளந்து வாங்கியிருந்தால் கல் போட்டிருப்பார்கள் என்றால் சரிதான், கல் போட்டுள்ளார்கள். அப்படியானால் தாவா சொத்தில் அத்துக்கல் உள்ளதா என்றால் உள்ளது. நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் வழக்கு சொத்தை 4 மணி நேரம் அளந்த பிறகும், வழக்கு சொத்தில் அத்துக்கல் எதுவும் இல்லை என்றும், சர்வேயில் உள்ள அளவுகளுக்கும், பூஸ்துதியில் உள்ள அளவுகளுக்கும் மாறுபாடு உள்ளதாகவும் கூறியுள்ளார் என்றால் சரியல்ல.

3) தாவா கோயிலுக்கு நான் டிரஸ்டி என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. அதுபோல எனது தாயார், சகோதர சகோதரிகள் ஆகியோர் தாவா கோயிலுக்கு டிரஸ்டி என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. இவ்வழக்கின் 3ம் பிரதிவாதி பன்னீர்செல்வம், 4ம் பிரதிவாதி பொன்னுசாமி, 5ம் பிரதிவாதி சுப்ரமணியன் ஆகியோர் இறந்துவிட்ட நிலையில், மேற்படி நபர்கள் தாவா கோயிலில்

நிர்வகிப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களா என்றால் வாரிசு அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

4) அவ்வாறு மேற்படி நபர்கள் டிரஸ்டியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. என்ன ஆவணம் உள்ளது என்றால் கோயிலுக்காக வழக்கு சொத்தை கிரையம் பெற்ற போது ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணத்தில் மேற்படி 5 நபர்கள் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி 5 நபர்களில் 2 முதல் 5 நபர்கள் காலமாகிவிட்டனர் என்றாலும், நான் இரண்டாம் பிரதிவாதியின் வாரிசு என்று அ.வ.எண்.213/2006 வழக்கை தொடர்ந்து நடத்தி வருகிறேன் என்றாலும் சரிதான்.

5) ஒரு கோயில் என்றால் ஒரு குறிப்பிட்ட நபர்கள் மட்டுமே டிரஸ்டியாகவோ, நிர்வாகிகளாகவோ இருக்க முடியும் என்றாலும், மேற்படி நிர்வாகிகளையும், அரசோ அல்லது கோயில் பங்காளிகளோ தான் தேர்ந்தெடுக்க முடியும் என்றாலும் சரிதான், தாவா கோயிலின் நிர்வாகிகளை பங்காளிகள் தேர்ந்தெடுத்தனர். தாவா கோயிலில் எங்களை நிர்வாகிகளாக தாவா கோயில் பங்காளிகள் தேர்ந்தெடுத்தார்களா என்றால் தேர்ந்தெடுத்துள்ளார்கள். காலம் சென்ற 4ம் பிரதிவாதி பொன்னுசாமியின் வாரிசான 6ம் பிரதிவாதி கலியமூர்த்தியை நிர்வாகியாக தேர்ந்தெடுத்தார்களா என்றால் தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

6) காலம் சென்ற 5ம் பிரதிவாதி சுப்ரமணியின் வாரிசான 7ம் பிரதிவாதி ரவியை நிர்வாகியாக தேர்ந்தெடுத்தார்களா என்றால்

தேர்ந்தெடுத்துள்ளார்கள். ஒரு கோயில் என்றால் அதற்கு வரவு, செலவு கணக்குகள் உண்டு என்றால் சரிதான். மேற்படி கணக்குகளை ஒரு லெட்ஜர் போட்டு பராமரிப்பார்கள் என்றால் சரிதான். அதுபோல இன்ன தேதியில் கூட்டம் நடைபெற்றது என்றும், இன்ன நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்கள் என்றும் தீர்மானம் போட்டு அதனை லெட்ஜரில் எழுதுவார்கள் என்றால் சரிதான்.

7) அதுபோல எங்கள் குடும்பத்தை பொறுத்து 2ம் பிரதிவாதி மருதை காலமான பிறகு அவரது வாரிசுகளான எங்கள் அனைவரையும், தேர்ந்தெடுத்துள்ளார்களா என்றால் இல்லை, என்னை மட்டும் தேர்ந்தெடுத்துள்ளார்கள். அப்படியானால் 9 முதல் 11, 13 முதல் 17 பிரதிவாதிகள் தாவா கோயிலுக்கு டிரஸ்டிகள் அல்ல என்பதால் அவர்கள் இவ்வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர்கள் என்றால் சரியல்ல.

8) 4 மற்றும் 5 பிரதிவாதிகள் காலமானபிறகு அவர்களின் வாரிசுகளான 6, 7 பிரதிவாதிகளை தாவா கோயிலுக்கு டிரஸ்டியாக சேர்க்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டதா என்றால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, பங்காளிகள் அடிப்படையில் அவர்களும் டிரஸ்டிகள் தான். 6, 7, 9 முதல் 17 பிரதிவாதிகள் சேர்க்கப்பட்டதன் பொறுத்து எந்தெந்த தேதியில் கூட்டங்கள் நடைபெற்றது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

9) சில நாட்களுக்கு முன்பே 3ம் பிரதிவாதி பன்னீர் செல்வம் காலமானார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதியின் வாரிசுகளை

இவ்வழக்கில் 18 முதல் 20 பிரதிவாதிகளாக கட்சி சேர்த்துள்ளோம் என்றால் சரிதான். 18 முதல் 20 பிரதிவாதிகளும், கோயில் டிரஸ்டி என்பதை கூட்டம் போட்டு தேர்ந்தெடுத்துள்ளோம் என்றால் சரிதான். தாவா கோயில் கூட்டம் போட்டே 18 முதல் 20 பிரதிவாதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக எனது எதிர் வழக்குரையில் ஏதேனும் கட்சி செய்துள்ளேனா என்றால் இல்லை.

10) தாவா நிலத்தை வாங்கும் பொழுது தாவா கோயிலுக்கு தானமாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நாங்கள் எழுதி வாங்கிய பத்திரத்தின் நான்கெல்லையில் பாசன கன்னிக்கும், இதர நிலத்திற்கும் வடக்கு என்று கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ.1 ஆவணத்தில் பாசன கன்னியை தவிர்த்து தான் கிரையம் செய்து கொடுத்ததாக காட்டப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் பாசன கன்னிக்கு வடக்கு என்று உள்ளது.

11) தாவா கோவிலுக்காக எங்களுக்கு இனாம் சாசனம் எழுதிக்கொடுத்த அதே நபர் தான் அன்றையதினமே வாதிக்கும் கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். வாதிக்கு எவ்வளவு கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் எங்களுக்கு 36 செண்டும், வாதிக்கு 32 செண்டும் கொடுக்கப்பட்டது. உபயவாதிகளின் சொத்தின் புல எண். தெரியுமா என்றால் புல எண்.67/1. மேற்படி புல எண்ணின் மொத்தி விஸ்தீரணமே 78 செண்ட் தான் என்றால் சரிதான்.

12) மேற்படி புல எண்ணில் எங்களுக்கு மேல்புறம் 36 செண்டையும், மத்தியில் 32 செண்டை வாதிக்கும், அதனை அடுத்து 3 செண்டை அஞ்சலை என்பவருக்கும் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல,

வாதியின் 32 செண்டில் தான் 3 செண்டை அஞ்சலைக்கு வாதி கொடுத்துள்ளனர், மீதமுள்ள 4 செண்ட் குப்புசாமிக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

13) தாவா கோயிலுக்காக எங்களுக்கு தானமாக கொடுத்த AP.சுப்ரமணியன் என்பவரே மேற்படி அஞ்சலைக்கு 3 செண்டை கிரையம் கொடுத்துள்ளார் என்றாலும், நான் சொல்வது போல் வாதி கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எங்களது சொத்திற்கு தென்புறத்தில் தான் குப்புசாமியின் 4 செண்ட் உள்ளது என்றால் பாசன கன்னிக்கு தென்புறமே உள்ளது.

14) பாசன கன்னிக்குட்படவே எங்களுக்கு சொத்து கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும், ஆனால் பாசன கன்னியை நாங்கள் எல்லையாக காண்பித்து அதை தவிர்த்து வாதியின் இடத்தை ஆக்கிரமிக்க முயற்சிக்கிறோம் என்றால் சரியல்ல. எங்களுக்கு பாசன கன்னியுடன் சேர்த்து தான் சொத்து கொடுக்கப்பட்டுள்ளது வாதி கட்சி செய்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

15) வாதி அவரது 32 செண்டிற்கு நான்கெல்லை பொறுத்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இவ்வழக்கிற்கு பிறகாவது எங்களது வழக்கில் எங்களுக்கு பாசன கன்னியுடன் சேர்த்து தான் சொத்து கொடுக்கப்பட்டுள்ளது என்று விளம்புகை பரிகாரம் ஏதும் கோரியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி வழக்கில் எங்களது வழக்குரையில் எந்த தேதியில் வாதி இடையூறு செய்தார்கள் என்று குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை.

16) கோயில் சொத்தை அபகரிக்கும் எண்ணம் வாதிக்கு கிடையாது என்றாலும், நாங்களே வாதியின் சொத்தை அபகரிக்க எண்ணுகிறோம் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தை உட்பட அனைத்து சொத்துக்களையும், குத்தகைதாரர்களாக தங்கராஜ், வாதியும் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. எங்களுக்கு தானம் கொடுக்கும் போது சொத்து அளக்கப்பட்டு, கல் போடப்பட்டதா என்றால் அளக்கப்பட்டு, கல் போடப்பட்டது.

17) வாதியின் சொத்தை அபகரிக்கவே அளந்து போடப்பட்ட கல்லை நாங்கள் பிடுங்கிவிட்டோம் என்றால் சரியல்ல. அதுபோல வாதி அவர் வீடு கட்டுவதற்காக மண்ணை எடுத்து ஆழப்படுத்திவிட்டார் என்றால் சரிதான். மீதியுள்ள மேடான பகுதியை தாவா கோயில் சொத்துடன் சேர்ப்பதற்காகவே நாங்கள் கல்லை பிடுங்கிவிட்டோம் என்றால் சரியல்ல. நாங்கள் வாதி தரப்பில் எங்கள் கோயில் சொத்தை ஆக்கிரமிப்பதாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

18) நாங்கள் வழக்கு சொத்தை ஆக்கிரமிக்கவே மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளதால் தான் நாங்கள் எவ்வித புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, புகார் கொடுத்துள்ளோம். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் நான்கெல்லையை அளவீடு செய்யாமல் நீதிமன்ற ஆணையர் கன்னியை தவிர்த்து போட்டுள்ள அறிக்கையின் அடிப்படையிலேயே தற்போது கட்சி செய்து வருகிறோம் என்றால் சரியல்ல.

19) சர்வேயர் நான்கெல்லைகளை சரியாக அளவீடு செய்து தரவில்லை என்று நீதிமன்ற ஆணையர் தெரிவித்துள்ளார் என்றால்

சரியல்ல. இவ்வழக்கில் வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ஒப்பம்/– ப. கோபாலஅரசி,

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.